Registered as a Newspaper [illegible] 04 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் [illegible] Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 21 (03-02-94) வியாழக்கிழமை ஓசை 350

## யாழ். திறந்த பல்கலைக் கழகம் மீண்டும் செயற்படுத்த முயற்சி

திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையம் தொடர்ந்து செயல்படுவதற்கு கொழும்பு திறந்த பல்கலைக் கழகமும் யாழ். உயர் கல்வி முக்கியஸ்தர்களும் எடுத்த முயற்சியினால் தொடர்ந்து யாழ். பிராந்திய நிலையம் இயங்கும் என உறுதியாகியுள்ளது. யாழ். பிராந்திய நிலைய மாணவர்நலன்புரி அமைப்பு சகல உறுப்பினர்களையும் ஆண்டு 1990இற்கு பின் கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்த சகல மாணவர்களையும் புதிதாக பதவி ஏற்றுள்ள யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரனை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

# ஜனாதிபதி தெரிவு முறையை மாற்றடி.பி.விஜேதுங்கா முயற்சி

## சிங்களவரின் ஒத்துழைப்பு கோருகிறார்

[கொழும்பு]

**சிறிலங்காவில் தேர்தல் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தற்போதைய முறை மாற்றி அமைக்கப்படும்என ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்துள்ளார். இதற்கு பதிலாக ஜனாதிபதியை பாராளுமன்றமே தெரிவுசெய்யவேண்டும் என்பதையே தமது ஐக்கிய தேசியக் கட்சியினரும் விரும்புவதாகவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு தரவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.**

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில்; பாராளுமன்றத்தால் ஜனாதிபதி தெரிவாகும் பட்சத்தில் தற்போதைய நடைமுறையில் உள்ள ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் என்று இரு தேர்தல்களில் ஜனாதிபதி தேர்தலை நீக்கிவிட முடியும் என அவர் குறிப்பிட்டார்.

விரைவில்இவ்வாறுகொண்டு வரப்படும் மாற்றங்களுக்கு பெரும்பான்மை இன மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன் மூலமே ஒற்றை ஆட்சி முறையை பேண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டம்பிரதமர் ரணில் தலைமை வகிக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் வழங்கப்படும் என்றும் இதன் பின் இது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படலாமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதை அமுலாக்க வேண்டுமா என்பதை உயர்நீதிமன்றம் முடிவு செய்யும் எனவும் தெரிவித்தார்.

இது குறித்த இறுதி முடிவுகள் எடுப்பதற்கான கருத்துப் பரிமாற்றங்கள் கட்சிக்குள் நடைபெறுகின்றன. பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்திற்கு அமையவே முடிவு எடுக்கப்படும். பல தேர்தல்களைச் சந்திக்கக் கூடிய பலம் நம்மிடம் இல்லை என டி.பி. விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா அதிகாரிகளின்

## இந்திய விஜயங்களுக்கு தடைவிதிக்க வேண்டும்

### பிரபாகரனை பிடிக்கவேண்டும்

(டில்லி)

சிறிலங்காஅதிகாரிகள்இந்தியாவிற்கு விஜயம்செய்வதற்கு தடை விதிக்கப்படவேண்டும் என்று அகில இந்திய ராஜீவ் காந்தி அணி கோரிக்கை விடவிருப்பதாக தெரியவருகிறது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக தேடப்படும் புலிகள் இயக்கத்தினரை கைது செய்து சிறிலங்கா அரசாங்கம் ஒப்படைக்க வேண்டும் எனவும், அவ்வாறில்லாவிட்டால் இலங்கை அரசாங்கம் இவர்களைப் பிடிக்க இந்திய அரசின் உதவியை நாட வேண்டும் என்றும் அவ்இயக்கம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியிலுள்ள சிறிலங்கா தூதுவரகம் மூலம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு இவ் இயக்கத்தின் மகஜர் ஒன்றும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது:

## கனேடிய,அரசின் நல்லெண்ணத்துடன் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சி

### தொண்டாவிற்கு கனடா வர அழைப்பு

(ரொரன்ரோ)

இலங்கை இனப்பிரச்சினைக்கு கனேடிய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை பயன்படுத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு கனேடிய அரசு பிரதிநிதிகளுடன் பூர்வாங்க பேச்சுகளை நடத்த அமைச்சர் தொண்டமானை கனடாவுக்கு வருமாறு அங்குள்ள தமிழ் பிரமுகர்களும் மதத்தலைவர்களும் அகதிகள் நலனில் அக்கறை கொண்ட கனேடியர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கனடாவில் இலங்கை தமிழ் அகதிகளின் நலன்களை கவனிக்கும் சட்ட நிபுணர் மாக்ஸ்பேர்கர் அமைச்சர் தொண்டமானுக்கு கடந்தவாரம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அக் கடிதத்தில் இலங்கையில் இருந்து கனடா வந்திருக்கும் அகதிகளின் அவலங்கள் தொடர்பாகவும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் கனடா அரசு பங்களிப்பை செய்யக்கூடிய சாத்தியங்கள் குறித்தும் அவ் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக கனேடிய எம். பிகள் மற்றும் அமைச்சர்களுடன் கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தலைவர்கள் நெருக்கமாக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க கனேடிய அரசினுள் இருக்கும் அக்கறையுடைய அரசியல் வாதிகளுடனும் தமிழ் சமூகத்தின் தலைவர்களுடனும் ஆலோசனை கலக்க உங்களை கனடாவிற்கு அழைக்கின்றோம். அமைதி காப்பதிலும் சமாதானம் கொண்டுவருவதிலும் கனடாவிற்கு பெருமைக்குரிய பாரம்பரியம் ஒன்று உள்ளது.

இலங்கையில் நடைபெறும் மோதலுக்கு தீர்வு ஒன்றை கொண்டுவரக்கூடியதாக மத்தியஸ்த பங்களிப்பைச் செய்ய வாய்ப்புக் கிடைக்குமானால் கனேடியர்கள் பெருமைப்படுவர் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டார் தலையீட்டை

## உறுப்பினரை பதவி நீக்கும் செயலாளர் அதிகாரத்தை ஒழிக்க முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் [illegible] பாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசியலமைப்பில் மாற்றம் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் முறைக்குபிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்காது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அனுரா ஆதரவாளர்களும், நவசமசமாஜக் கட்சி, தினேஸ்குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் ஆதரவு

(4ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் தொண்டமா ஆரம்பிப்பதற்கான சூழ் ...லது.

# வெளிநாட்டார் தலையீட்டை அரசாங்கம் விரும்பவில்லை

## பி. பி. ஸி. விமர்சனம்

(லண்டன்)

இலங்கை இனப்பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதை அரசாங்கம் விரும்பவில்லை என பி. பி. ஸியின் செய்தியாளர் கல்பனா ஐசக் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விபரிக்கையில், வடக்கு-கிழக்கில் சமாதானம் ஏற்பட வெளியார் தலையீடு தேவை என வெவ்வேறு தரப்பினர் வெவ்வேறு காலத்தில் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அரசு இவ் விடயத்தைப் புறக்கணித்து களத்தில் முடிவுகளை தீர்மானித்துள்ளது போல் தெரிகிறது.

ஐ. நா. இதில் தலையிடுமாறு கோரும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம், நோர்வே என்பன நிறைவேற்ற ஐ. நாவில் கடந்த ஆகஸ்டில் முயன்றபோது அரசு அதை கடுமையாக எதிர்த்தது. அரசின் ராஜீக ரீதியான அழுத்தம் இதை கைவிடச்செய்தது. கடந்த காலத்தில் இதேபோன்று பொதுநலவாய நாடுகளின் முக்கியமாக அவுஸ்திரேலியாவின் சமரச முயற்சிகளை அரசு நிராகரித்தது.

விடுதலைப் புலிகளும் வெளியார் தலையீட்டில் நாட்டம் கொள்ளவில்லை. இந்திய அமைதிப்படையுடன் புலிகளுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் இதற்கு காரணமாக இருக்கலாம்.

கடந்தவாரம் ஆயர் நிக்கலஸ் பெர்னான்டோ யாழ்ப்பாணம் சென்றார். அவர் கொழும்பு திரும்பி போரை நிறுத்த அனைத்து தரப்பும் உதவுமாறு வேண்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் அரசு ஏற்படுத்திய சேதம் தெற்கில் மக்களுக்கு தெரியாது

## மெதடிஸ்த திருச்சபை பிரதிநிதி தெரிவிப்பு

(வடமராட்சி)

இங்குள்ள மக்களின் கஷ்ட நிலைமைகளை தெற்கில் உள்ள மக்களுக்கு தனிப்பட்ட முறையிலும், கலந்துரையாடல்கள் மூலமும் தெரியவைப்போம்.

இவ்வாறு வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்துள்ள மெதடிஸ்த திருச்சபைக் குழுவைச் சேர்ந்த ரோகித தசில்வா வடமராட்சிச் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரசினால் இவ்வளவு தூரம் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக தென்பகுதி மக்களுக்கு தெரியாது. அங்குள்ள மக்கள் இதுபற்றி அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை.

ஆலயங்கள் மீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசி வருவது எங்கள் திருச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. நாங்கள் அங்கே சென்றதும் இங்குள்ள நிலைமைகள், மக்களின் துன்பங்கள், துயரங்களை தெரியவைப்போம்.

எங்களுக்கு யாழ்ப்பாணம் வருவதற்கு சிறிலங்கா அரசாங்கம் ஒருவார அனுமதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மெதடிஸ்த திருச்சபையினர் புலிகளுடன் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்த மெதடிஸ்த திருச்சபை குழுவினர் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசவுள்ளனர். இன்றைய அரசியல் நிலைமை குறித்தும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இரு தரப்பினரிடையேயும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

# அங்கிலிக்கன் ஆயர் கிளிநொச்சி வந்துசேர்ந்தார்

கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி வண கெனத் பெர்னான்டோ நேற்று பிற்பகல் கிளிநொச்சி வந்து சேர்ந்தார். இவருடன் மனைவி சித்ரா பெர்னான்டோ, கிழக்காசிய கிறிஸ்தவ மன்ற செயலர் அருட்கலாநிதி ரியன்கி பெரேரோ, யாழ். மறை மாவட்ட நிர்வாகி டொனால்கனகரட்னம், ஆகியோரும் வந்துள்ளனர்.

நேற்று மாலை 4.00மணியளவில் கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்திலிருந்து இவர்கள் ஊர்வலமாக கருணா நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இக் குழுவினர் எதிர்வரும் சனியன்று யாழ்ப்பாணம் வருகை தருவர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் 19ஆம் திகதிவரை தங்கியிருப்பர். கடந்த ஆண்டு ஜனவரியிலும் ஆயர் கெனத் பெர்னான்டோ இங்குவிஜயம் செய்தது தெரிந்ததே.

# ... ஒழிக்க முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்குவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் கட்சிச் செயலாளருக்கு உள்ள அதிகாரததை இல்லாதொழிக்க ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

இவ்வாறான செயலாளரின் அதிகாரத்தை ஒழிக்க அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வெளியூர் தபால்களை வெள்ளிக்குமுன் சேர்க்கவும்

தற்போது காங்கேசன் துறையில் நங்கூரமிட்டுள்ள ''கோமாரி'' கப்பல் மூலம் கொழும்புக்கும் மற்றும் வெளியூர்களுக்குமான கடிதங்கள் அனுப்பப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பொதுமக்கள் எதிர்வரும் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00மணிக்கு முன்னர் தங்கள் கடிதங்களை யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலகத்தில் உள்ள தபால் பெட்டியில் சேர்க்குமாறு பிரதம அஞ்சல் அலுவலக நிர்வாகத்தினால் வேண்டப்படுகிறார்கள்.

# இன்று ஒளிவீச்சு

நிதர்சனம் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட டிசெம்பர் மாத ஒளிவீச்சு அகன்றதிரையில் இன்று மாலை5 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

... கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்காது என தெரி... சமாஜக் கட்சி, தினேஷ்குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் ஆதரவு

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் விரும்புகிறதாம்

## டி.பி. விஜேதுங்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தமது அரசாங்கம் விரும்புவதாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரிடையே உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்ததாக இந்திய வானொலி

(4ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையற்ற பேச்சு புலிகளின் விருப்பம் அதுவே

## துறவறசங்க தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு மட்டுமே விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர். என யாழ் வந்து திரும்பிய றோமன் கத்தோலிக்க ஆயர் குழுவில் அங்கம் வகித்த துறவற சங்கத்தலைவர் '' திவயின ''

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரதின விழாவில் குண்டு வெடிக்கலாம்

## கொழும்பில் கடும் பாதுகாப்பு

(கொழும்பு)

சிறிலங்கா தலைநகர் கொழும்பில் நாளை நடைபெறும் சுதந்திரதின விழாவில் விடுதலைப்புலிகள்குண்டு வெடிப்பை மேற்கொள்ளலாம் என அஞ்சி கொழும்பில் கடும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

சுதந்திரதின விழாவில் புலிகள் தாக்கலாம் என இராணுவ உளவுப் பிரிவு எச்சரித்துள்ளதாகவும் இதனையடுத்தே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வீரச்சாவு

## வீரவேங்கை மலரவன்

யாழ். மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை மலரவன் (கிருஷ்ணன் உதயகுமார்,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மட்டு துப்பாக்கிசூட்டில் இரு பொதுமக்கள் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

சிவலிங்கம் யோகிதன், எஸ் யோகநாதன் ஆகிய இருவருமே இவ்வாறு பலியாகியதாக தெரிய வந்துள்ளது.

# வெளிநாடு செல்ல முயன்ற கடற்படை சிப்பாய் கைது

(கொழும்பு)

கடற்படைச் சேவையில் இருந்து தப்பி வெளிநாடு செல்ல முயன்ற கடற்படை சிப்பாய் ஒருவரை தேசிய உளவு பணியகத்தினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்தனர். எனினும் அச்சிப்பாய் பின்னர் கட்டுநாயக்கா பொலிசாரிடம் இருந்து தப்பியோடி விட்டார்.

ஏ.பி. அபேசிங்க என்ற இச் சிப்பாய் சில மாதங்களுக்கு முன் சேவையிலிருந்து தப்பி ஓடி தலைமறைவானார். கடந்த திங்களன்று இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெளிநாடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### சைனீஸ் உணவு சேவை

மதிய உணவு - மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி - 11.30 - 2.00 திருமணம், பிறந்தநாள், பிரியாவிடை- புரியாணி, பிறைட் றைஸ், பிறைட் நூடில்ஸ், சிற்றுண்டி வகை நாடவேண்டிய முகவரி. KARUNIYA CHINESE HOTEL 166 IST CROSS STREET JAFFNA.
(7384)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6வது மைல்கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி, (7380)

### தவறவிடப்பட்டது

31-01-94 அன்று அச்சுவேலி பஸ்ஸிலிருந்து அரசடி, கந்தர்மடத்தில் இறங்கும் போது அடையாள அட்டை2 பிறப்பத்தாட்சிப் பத்திரம், வங்கி ஆவணங்கள் அடங்கிய போஸ்ஒன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7390)

### தவறி விட்டது

31-01-94 அன்று நல்லூருக்கும், பலாலி வீதிக்கும் இடையில் அடையாள அட்டை இல. 725291434V தவறவிடப்பட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7397)

### தவறிவிட்டது

ஓமந்தையில் இருந்து யாழ் நோக்கி வரும்போது எனது தேசிய அடையாள அட்டை புத்திரகொண்டான் செல்வகுமார் இரம்பைக்குளம் வவுனியா என்ற முகவரியுடைய அட்டைதொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் சைமன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7404)

### புதிய நியமனம்

யாழ்ப்பாண பல்கலைக்

### தவறி விட்டது

சங்கானை, சிலம்புப் புளியடியைச் சேர்ந்த திரஞ்சனின் மோட்டார் வாகனப் பதிவுப் பத்திரம் 87சிறி 8347 இலக்கமுடைய பத்திரம் தொட்டிலடிக்கும், மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சங்கானை காவல்துறையிலோ அல்லது மேற்குறிப்பிடப்பட்ட விலாசத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7398)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-02-28ஆம் தேதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பயிராக்கவியலில்தற்காலிக உதவி விரிவுரையாளர்

சம்பளஅளவுத்திட்டம்:-
தற்காலிக உதவி விரிவுரையாளர்.
ரூபா 5,270/-
(நிலையானது)
மாதமொன்றுக்கு

இத்துடன்நிலுவையிலுள்ளவேலைநிறைவேற்றப்படியாக 1994 திசம்பர் 31ஆம் திகதிவரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்,

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும்20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனக் கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல்வேண்டும் படிவங்களையும் விபரங்களையும் தபால் மூலம்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23X10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பட்ட கடித உறையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள் அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்டசபைகளிலுள்ளவிண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப்,
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-01-19
(சி-8500)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலை

பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/-ரூபா

### ஓவியம், சிற்பம், சித்திரம் பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவுகள் வெள்ளி
04 - 02 - 1994 மாலை 3 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

பயிற்சிகள் தொடர்பான விபரங்களை நிலையத்தில் பெறலாம்.

## கலையகம்

ஓவியக் கல்வி நிலையம்
பென்த கொஸ்தே வீதி,
கச்சேரியடி - யாழ்.
(7395)

மலிவு விலையில் பல்வகை பொருட்கள்
அன்பளிப்புகளிற்கு அன்பளிப்பு மடல்கள்
ஆண் பெண் சிறுவர்க்கான தையல் வேலைகள்
ரூபா 500/- ற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு
இலவச பரிசு சிட்டைகள்.

## எழிலகம் மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்


குறிப்பு: ஜனவரி மாதத்திற்கான சீட்டிழுப்பு இன்று காலை 11-00 மணியளவில் இடம்பெறும்.
(சி-8501)

### நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது

31 - 12 - 93 அன்று சுகுணாஸ் பிடவை மாளிகையில் நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டையுடன் வந்து தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

சுகுணாஸ்
பிடவை மாளிகை
கிருஷிகா ஆடை அகம்
29, 69 A நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
(சி-8502)


### முதலாம் ஆண்டு நினைவலைகள்



# உலகவங்கி உபதலைவர் கொழும்பு வந்துள்ளார்

(கொழும்பு)
உலகவங்கியின் உபதலைவர் இஸ்மாயில் சோகெல்டின் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளார். இவர் கொழும்பில் தங்கியிருக்கும்போது அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பாகச் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

# துப்பாக்கி பிரயோகித்து தோட்ட அதிகாரி எச்சரிக்கை

## தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)
தோட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து தொழிலாளர்களைப் பயமுறுத்தியதை எதிர்த்து இரண்டாயிரத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பன்வில பொலிஸ் பிரதேசத்தைச் சேர்ந்த மடுல்கல மவுசா தோட்டத்தொழிலாளர்கள் இந்தவேலை நிறுத்தத்தை நடத்துகின்றனர்.

கடந்த ஆண்டின் போனஸ் பாக்கியை வழங்கும் படியும், தொழிலாளர்களின் குழந்தைகளது நலன்களைக் கவனிக்கவும், வருடாந்த விடுமுறை சம்பளத்தை வழங்கும் படியும், குடியிருப்புக்களை பழுது பார்க்கும்படியும், மலசலகூடங்களை அமைத்துக்கரும் படியும், அநீதியாக விதிக்கப்படும் அபராதத்தை நிறுத்துமாறும் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தை கோரியதையடுத்தே தோட்ட அதிகாரி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்.

தோட்ட அதிகாரியின் இத் துப்பாக்கிக்கு முறைப்படியான பொலிசாரின் அனுமதிப் பத்திரம் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கணக்குப்பதியுனர் சங்கம்

அரசாங்க, உள்ளூராட்சி மாகாணசேவையில் கடமையாற்றும் கணக்குப்பதிவாளர்கள் இணைந்து தமிழ் கணக்குப் பதியுனர் சங்கம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இது தொடர்பான அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மு. ப. 10 00 மணியளவில் நல்லூர் ஸ்தான சி சி த. க. பாடசாலையில் நடைபெற உள்ளதாகவும் அறியப்படுகிறது. (17)


ஈழநாதம்
# 4 ஆம் ஆண்டு
## நிறைவுப் போட்டி
## முடிவுத்திகதி நீடிப்பு

சிறுகதை, கவிதை,
மாணவர்களுக்கான கட்டுரை
முடிவுத்திகதி: **05-02-1994**

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.
இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.

விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப் படும். (7404)

## புதிய நியமனம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வேந்தராக பேராசிரியர் நடராசா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்

## நாடக செயன்முறை கருத்தரங்கு

யாழ் கல்வித்திணைக்கள இரண்டாவது வலயத்தினர் தமிழ்மொழி, கலைத்திறன் போட்டிகளுக்கான சிறுவர் நாடக செயன்முறைக் கருத்தரங்கு ஒன்றினை வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கல்விப் பணிப்பாளர் திரு. க கந்தசாமி தலைமையில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

## கண்டெடுப்பு

புலோப்பளை படகுச் சேவை படகு ஓட்டுனர் வேலை அட்டவணை ஆறு நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் க. தர்மலிங்கத்தால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இல. 25,2ஆம் குறுக்குத் தெரு குருநகரைச் சேர்ந்த க. கிறிஸ்துராசா, ஆ.மனோசரன், டே. அருள்ராஜ் ஆகியோரின் வேலைஅட்டவணைகளே இவைகள் ஆகும்.

## ஆதாரம் காட்டி பெறவும்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கும் விடுதலைப் புலிகள் அரசியற்பிரிவு அலுவலகத்துக்குமிடையில் வைத்து மூக்கு கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோவில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளவும். (யோ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலைவர் பதவிக்கான (பெண்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994-03-04ஆம் தேதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

5,400|- ரூபா மாதமொன்றிற்கு (நிலையானது)

தகைமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி விடுதிகளை நிர்வகிப்பதிலும் முகாமை செய்வதிலும், அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது:

நாற்பது ஆண்டுகளிற்கு மேற்படலாகாது. பரீட்சை ஒன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் தெரிவு நடைபெறும்.

வெற்றி பெறும் விண்ணப்பதாரி நியமிக்கப்படும், கிளிநொச்சியில் | மருதனாமடத்தில் | யாழ்ப்பாணத்தில் உள்ள வதிவுமண்டபத்தில் வசித்தல் வேண்டும். ஆனால் அவரின் குடும்பத்துடன் வதிவுமண்டபத்தில் வசிக்க முடியாது. வெற்றி பெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணை வைப்பாக ரூபா 5000|- செலுத்துதல் வேண்டும். இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் 10 தவணைகளில் கழிக்கப் படல் வேண்டும்.

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 திசெம்...யின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20|-ரூபாவை பல்கலைக் கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20|- ரூபா பெறுமதியான காசுக்கட்டளைக் தபாற் கட்டளை உடன் 23 X 10 - ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள்கள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள்னூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.


விண்ணப்ப முடிவுத்தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விபரங்கள் தெளிவில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1994-2-29

(இ-8499)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### லெப். தூயவன்

**[மகாலிங்கம் ஜெயலிங்கம் (ஜெயன்)]**

திதி: 04 02 1994

தங்கத் தளபதி கிட்டண்ணாவுடன்
சங்கத் தமிழனின் தன்மானம் காத்திட
வேங்கைத் தலைவனின் வேள்வியிதுவென
வங்கக் கடலிலே காவியமாகிய
மங்காச் செல்வமே ''தூயவா''

உன்னையும் ஏனைய ஒன்பது வேங்கைகளையும் பிரிந்து பன்னிரு மாதங்கள் மறைந்தாலும் இன்னும் பல வருடங்கள் உமது நினைவழியாமல் துயருறுகின்றோம். நாளை (04-02-94) வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், நண்பர்கள், உறவினர்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட முறையில் அழைக்காமைக்கு வருந்துகின்றோம்)

127|1, கண்டி வீதி,
அரியாலை.

(7400)

தூயவனின்
குடும்பத்தினர்

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

**போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்**

## நினைவு கூருகின்றோம்..

## 1994-02-03

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-தம்பலகமம், பட்டிமேடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழிளைஞர்கள்,

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஆதரவாளர்,

**சிவஞானசுந்தரம் சிவரஞ்சன்** (குருக்கள்மாவடி- மிருசுவில்)

1990 ஆம் ஆண்டு மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

**சின்னராஜேந்தர்** (நாகசுந்தரம் சிறீபாலன் - பிரதான வீதி, பேசாலை - மன்னார்)

1991 ஆம் ஆண்டு கிளி - பளை, கிளாலிப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மதுமிதா** (பொன்மலர் பொன்னம்பலம் - 26, கோவிற்குளம் - வவுனியா)

யாழ் - மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கஜன்** (செபமாலைமுத்து ஜக்சன் - 128, குறுக்குத் தெரு, மிருசுவில் - யாழ்)

1993 ஆம் ஆண்டு மட்டு - அம்பாறை மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**2-ம் லெப். ராகினி / ராஜினி** (துரோபதை அருணாசலம் - இலுப்பையடிச்சேனை -மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8498)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

நம் தொல்லைகள் பெரும்பாலும் நம்மை மேலும் சிறந்தவற்றிற்குப் பக்குவப்படுத்தப் பயன்படும் கருவிகளே.

— ஹென்றி வார்ட் பீச்சர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## சுற்றிவளைப்பிலிருந்து துப்பாக்கிச் சூடுவரை

எதிர்பார்த்தது போலவே கிழக்கில் இராணுவம் தனது 'தேர்தல் கெடுபிடிகளை' ஆரம்பித்துள்ளது. இன்னும் சுமார் ஒரு மாத காலம் - மார்ச் 01 - தேர்தலுக்கு இருக்கும் வேளையில், இராணுவம் தொடங்கியுள்ள இக்கெடுபிடியானது தேவைக்கு ஏற்ற விதத்தில் அதிகரித்துச் செல்லும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

தற்பொழுது முதல் நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டிருப்பவையே சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் ஆகும். ஒரு மாதகால இடைவெளியில் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையானது, இராணுவப் பரிபாஷையில் கூறுவதானால் 'துப்புரவு செய்தல்' என்று கூறப்படும். ஆனால், கடந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்தின் 'துப்புரவு செய்தல்' என்பதற்கும் தற்போதைய பிரயோகத்திற்கும் இடையில் சற்று வித்தியாசமும் உண்டு.

முன்னர் 'துப்புரவு செய்தல்' என்பது விடுதலைப் புலிகளை வெளியேற்றுதல் என்ற ரீதியில் அமைந்திருந்தது. தற்பொழுது விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, சிங்களக் கட்சிகளுக்கு குறிப்பாக ஐ. தே. கட்சிக்கு எதிரானவர்களை வெளியேற்றுதல், குறிப்பாகத் தமிழரை வெளியேற்றுதல் என்ற ரீதியிலேயே உள்ளது. தேர்தலில் வெற்றி பெறுதல் என்ற நோக்கமே இதற்கு அடிப்படை ஆகும்.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'துப்புரவு செய்யும் நடவடிக்கையானது, தமிழ் மக்களை அச்சுறுத்துவதாக அமைவதோடு, தேர்தல் காலத்தில் அப்பிரதேசங்களை விட்டு வெளியேறுவதற்குத் தூண்டுவதாகவும் இருக்கும். இந்நிலையானது, தேர்தலைத் தமக்கு ஏற்ற விதத்தில் நடத்திக் காட்டுவதற்கு அரசாங்கத்திற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும்.

கிழக்கு மாகாணத் தேர்தலைப் பொறுத்து சிறிலங்கா அரசாங்கத்திடம் இரு குறிக்கோள்கள் உள்ளன. ஒன்று கிழக்கு மாகாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்

# நெருக்கடி தீர்க்க தவறிய இந்திய - பாக் பேச்சுக்கள்

## நிச்சயமற்ற காஷ்மீரின் எதிர்காலம்

பாகிஸ்தானில் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தலைமையிலான புதிய அரசாங்கம் மேற்கொண்ட முதலாவது முக்கிய தீர்மானங்களில் ஒன்று படைகளை உச்ச தயார் நிலையில் வைத்திருப்பது என்பதாகும். காஷ்மீரின் தலைநகரான சிறிநகரில் ஏற்பட்ட ஹஸ்ரத்பால் பள்ளிவாசல் நெருக்கடியை தொடர்ந்து காஷ்மீரிற்கு கூடுதலான துருப்புக்களை இந்தியா அனுப்பி இருப்பதாக அறிவிக்கப்பட்டதாலேயே பெனாஸிர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

காஷ்மீரின் சுதந்திரத்தை- இன்றேல் பாகிஸ்தானுடன் காஷ்மீரின் இணைப்பைக் கோரும் ஆயுதம் தரித்த முஸ்லிம் தீவிரவாதிகள் பெண்கள், பிள்ளைகள் உட்பட சுமார் 150 யாத்திரிகர்களை பள்ளிவாசலுக்குள் பணயம் வைத்தது அறிந்ததே.

காஷ்மீர் முஸ்லிம்களுக்கு மிக முக்கிய புனிதஸ்தலங்களில் இப்பள்ளிவாசலும் ஒன்றாகும்

இத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானிய வெளிநாட்டு கூலிப்படையினர் உதவியளிப்பதாக இந்திய உளவுத்தகவல்கள் தெரிவித்தன. ஐ.நா. பொதுச்சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் காஷ்மீர் மீது உலக கவனத்தை திசைதிருப்பச் செய்ய நன்கு திட்டமிடப்பட்ட பாகிஸ்தானிய புலனாய்வுத் திட்டமே இந்த பணயக்கைதிகள் நெருக்கடி என்று இந்திய அதிகாரிகள் கூறினர். காஷ்மீரில் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வரவும் காஷ்மீரிகள் சார்பாக உலக அபிப்பிராயத்தை ஒன்று திரட்டவும் அதன் பங்கை தனது அரசாங்கம் வகிக்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் பூட்டோ கூறினார்.

சிறிநகர் இந்தியப் படைகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப்பட, காஷ்மீரின் ஏனைய பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. இவற்றினால் சுமார் ...யினால் முடிந்தது. பெனாஸிர் பிரதமரானார்.

எவ்வாறாயினும் பெனாஸிரின் அரசாங்கமும் முரண்பாடுகள் மலிந்திருந்த ஒன்றாக உள்ளது அரசாங்கத்தை தற்பொழுது ஆதரிக்கும் ஒவ்வொரு கட்சியும் குழுவும் தனிநபரும் பாகிஸ்தான் மக்கள் கட்சியில் இருந்து வேறான நோக்கங்களையும் இலட்சியங்களையும் கொண்டுள்ளனர் பின்னர் ஒரு கட்டத்தில் பெனாஸிர் அரசாங்கத்தின் சீர்குலைவுச் சக்தியாக இக்கட்சிகள், குழுக்கள் மாறலாம்.

சுமார் நான்கு தசாப்தங்களாக பாகிஸ்தானின் அரசியலில் இராணுவமும் அமெரிக்காவும் இரு பெரும் செல்வாக்குச் சக்திகளாக இருந்து வருகின்றன 1950ஆம்ஆண்டுகளின் நடுப்பகுதியில பாகிஸ்தானும் அமெரிக்காவும் இராணுவ ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது அத்தசாப்தத்தின் இறுதியில் பாகிஸ்தானில் இராணுவம் அதிகாரத்தைக் கைபற்றியது இராணுவம் அரசாங்கத்தை நடாத்திய நீண்ட காலகட்டங்கள் உள்ளன. அதிகாரத்தில் இல்லாத போதிலும் இராணுவம் அரசாங்க செயற்பாட்டில் பெரும் செல்வாக்கைக் கொண்டுள்ளது. இந்தக் கடினமான பிரச்சினையை பிரதமர் பெனாஸிர் எவ்வாறு கையாள்வார் என்பது அவதானிப்புக்குரியதாகும்.

எவ்வாறாயினும் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேறியது முதல் அமெரிக்க கேந்திர முக்கியத்துவ கணிப்பில் பாகிஸ்தானின் முக்கியத்துவம் பெருமளவில் குறைந்து விட்டது. இதன் விளைவாக இராணுவத்தின் செல்வாக்கும் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

ஜனநாயக மனித உரிமைகளை மதிக்குமாறும்- அணுசக்தி, ஏவுகணை திறமையை பெறுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும்- காஷ்மீர் தீவிரவாதிகளுக்கான ஆதரவை நிறுத்திக் கொள்ளுமாறும் காஷ்

ஆனால் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதைக் கூறுவது நிச்சயமல்ல,

இந்தியா இப்பொழுது ஓர் இக்கட்டான நிலையில் உள்ளது. இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி காஷ்மீர் என்பதால் அது ஒரு பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ள இந்தியா மறுக்கும் அதே வேளையில் காஷ்மீரில் அமைதியின்மையை பாகிஸ்தானே தூண்டி வருவதாக வலியுறுத்துகிறது. காஷ்மீர் நிலைமை சாந்தப்படுத்த முடியாத தொன்றாகிய பொழுது 1972ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் பரஸ்பர தீர்வுக்கான சாத்தியத்தை ஒப்புக் கொள்ளும் வழியை இந்தியா கடைப்பிடிக்கத் தொடங்கியது.

கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் நிலைமை கட்டுப்பாட்டை மீறியுள்ள நிலைமையிலும் கடந்த இரு தசாப்தங்களாக தீர்வுக்கான எந்த ஒரு முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள மக்கள் இந்தியாவிலிருந்து பெருமளவு அன்னியப்பட்டு வருகின்றார்கள். சர்வதேச மத்தியஸ்தத்தை தான் ஏற்றுக் கொள்ள பலத்த நிர்ப்பந்தத்திற்கு இப்பொழுது உள்ளாகியிருப்பதை இந்தியா காணுகிறது. இவ்வாறான ஒரு மத்தியஸ்தத்தை வழங்க ஐ. நா. செயலாளர் நாயகம் ஏற்கனவே முன்வந்துள்ளார். பாகிஸ்தான் அதை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இந்தியா ஏற்கவில்லை.

ஹஸ்ரத்பால் பள்ளிவாசல் நெருக்கடி ஒருவாறு தீர்க்கப்பட்டது இருந்தாலும் காஷ்மீர் பிரச்சினை தொடர்ந்து இருந்து வருகிறது. சர்வதேச மத்தியஸ்தத்துடனோ அல்லது இன்றியோ இரு நாடுகளும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியுள்ளது.

இரு நாடுகளினதும் வெளி

## மனித சமுதாய தேவைக்கு உலக வளங்கள்

### நெதர்லாந்து மாநாட்டில் தீர்மானம்

உலக தொழிற்சங்க இயக்கம் புதியஜனநாயக சமுதாய ஒழுங்கை நிலைநாட்ட உழைக்க வேண்டும். உலக வளங்களை ஜனநாயக அடிப்படையில் கட்டுப்படுத்தி மனித சமுதாயத்தின் தேவைகளுக்கும் பயன்படுத்துவதோடு அடிப்படை மனித உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலா தம்பு ஹேக்கில் நடைபெற்ற சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் சமர்ப்பித்த தீர்மானம் ஒன்று கூறுகின்றது. இத்தீர்மானம் ஏகமனதாக மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத் தீர்மானத்தில் உலக வளங்கள் தனியாரின் வருமானம் கருதி உபயோகிக்கப்படுதல் தடுக்கப்பட வேண்டும். மாறாக இந்த வளங்கள் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நோய்த்தடுப்பு ஆகியவற்றிற்காக உபயோகிக்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லஞ்ச தடுப்பு சட்டத்தின் கீழ் 8 ஆண்டு கடூழியச் சிறை

### கொ. மா. சபை உறுப்பினருக்கு தண்டனை

கொழும்பு மாநகரசபை அங்கத்தவரான எஸ். கோவிந்தராஜனை (இ.தொ.கா) லஞ்ச சட்டத்தின் கீழ் நான்கு குற்றச்சாட்டுக்களின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தனா குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்கினார்.

ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை என்ற வீதத்தில் எட்டு வருடச் சிறைத் தண்டனை விதித்தார். அத்துடன் 15ஆயிரம்ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதத்தினைக் கட்டத் தவறின் 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவும் தீர்ப்பு வழங்கப்பட்டது, அபராதத்தைக் கட்ட 28-2-94 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

பிரதிவாதி வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட பிரசன்னா ராஜ சூரியா பண்டாரநாயக்க என்ற பொலிஸ் கான்ஸ்டபிளை மீண்டும் வேலையில் சேர்ப்பதற்கு அவரிடம் 25 ஆயிரம்ரூபா கேட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது 23-5-90 அன்று அவர் பண்டாரநாயக்காவிடமிருந்து 5ஆயிரம் ரூபா பெற்றார் எனவும் மேலும், 3 சந்தர்ப்பங்களில் பண்டாரநாயக்காவிடமிருந்தும் அவரது தாயாரிடமிருந்தும் 5ஆயிரம் ரூபாவினையும் பத்தாயிரம் ரூபாவினையும் பெற்றார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## மாகாணசபை முறையால் நிர்வாகம் குழம்பியுள்ளது

### - தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழ் பாதுகாப்பு விவகாரமும், காணியும் இருக்க வேண்டுமென்று சுதந்திரக்கட்சி கோரிக்கைவிடுகின்றது. இதனையே விடுதலைப்புலிகளும் கோருகின்றனர். இதனால் தான் ஈழப் பிரிவினைவாதிகளுடன் சுதந்திரக் கட்சி கைகோர்த்துக் கொண்டிருப்பதாக நான் கருதுகின்றேன். இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

காலியில் பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், மாகாண சபை முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ...கைகளை திடீரென மாற்றிக் கொண்டு மாகாண சபைகளில் பதவியைப்பெற நப்பாசையுடன் போட்டியிடுகின்றது மாகாண சபைமுறையால் பொதுமக்களுக்கு சிறந்த நிர்வாகம் கிட்டவும் இல்லை. வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படவும் இல்லை. பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படவும் இல்லை. நிர்வாகம் குழப்பப்பட்டு விரயங்கள் அதிகரித்தது மட்டுமே மிச்சமாகியுள்ளது.

### கரபந்தாட்டம்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட கரபந்

கிழக்கு மாகாணத் தேர்தலைப் பொறுத்து சிறிலங்கா அரசாங்கத்திடம் இரு குறிக்கோள்கள் உள்ளன. ஒன்று கிழக்கு மாகாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என வெளியுலகிற்குக் காட்ட முற்படுவது. இதன் மூலம் வடக்கில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளை சிங்களவர் மத்தியில் சரிசெய்ய முற்படுதல், அடுத்ததாக, வெளியுலகிற்குக் காட்டிக் கொள்வதன் மூலம் பெருமளவு 'அபிவிருத்தி நிதி'யைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகும்.

இரண்டாவது, கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் அரசாங்கம் வெற்றியீட்டுவதன் மூலம் வடக்குடன் கிழக்கு இணையத் தயாராக இல்லை எனக் காட்ட முற்படுவது ஆகும். இதன் மூலம், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை சிதைவடையச் செய்வதும், அரசியல் ரீதியில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டதாகப் பிரசாரப்படுத்துவதும் ஆகும்.

இந்நிலையில், இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு ஏற்றாற் போலவே கிழக்கு மாகாணத்தில் தேர்தல் இடம்பெறும் என்பதே உண்மையாகும். இதற்கு ஏற்றாற்போல் தேர்தல் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இதில், தேர்தலில் எவ்வளவு வாக்குகள் பதிவாக வேண்டும், யார் யாருக்குப் பதிவு செய் செய்யப்பட வேண்டும் என்பவை யாவும் ஏற்கனவே ஐ. தே. கட்சி அரசாங்கத்தினாலேயே தீர்மானம் செய்யப்படும்,

இவ்வாறான தேர்தல்களை நடத்துவது ஐ. தே.கவிற்குப் புதியதொன்றல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க நடந்து கொண்ட முறையே இதற்கு நல்ல உதாரணம். இத்தேர்தலில் எவ்வளவு வாக்குகள் பதிவு செய்யப்பட வேண்டும், எந்த எந்தப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என ஐ. தே. க. தீர்மானித்திருந்தது. இதற்காக ஐ. தே. க. தேர்தலில் திட்டமிட்டுச் செய்த குழப்பங்கள், கொலைகள் ஜே வி. பியினரின் தலையில் சுமத்தப்பட்டன. இதேபோன்று, கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு இனத்தினரும் எவ்வளவு வாக்களிக்க வேண்டும் என ஐ. தே. க. இதுவரையில் தீர்மானித்திருக்கும் என்பதே உண்மையாகும்.

இதன் முதற்கட்டமே கிழக்கில் தொடங்கப்பட்டுள்ள சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் ஆகும். இதன் வளர்ச்சி தமிழர்களை விரட்டுதல், துப்பாக்கிச்சூடு நடத்துதல் வரை செல்லலாம். மறுவளமாக, வாக்குப்பதிவு செய்யுமாறு வற்புறுத்தப்படுதல் வரையும் செல்லலாம். ஆனால், இதில் எது இடம்பெற்றாலும் கிழக்கில் தேர்தல், தேர்தலாக இருக்கப் போவதில்லை.

கிழ வைத்திருக்கப்பட்ட, காஷ்மீரின் ஏனைய பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக அசம்பாவிதங்கள் இடம் பெற்றன. இவற்றினால் சுமார் 35 மரணங்கள் ஏற்பட்டன.

பாகிஸ்தானில் கடந்த அக்டோபரில் உண்மையிலேயே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைபெற்றன. 1990 ஆம் ஆண்டு அக்டோபரில் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பெனாஸிர் பூட்டோ இத் தேர்தல்களில் மீண்டும் பதவிக்கு வந்தார் பெனாஸிரின் பாக்கிஸ்தான் மக்கள் கட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாது போனாலும் 205 ஆசனங்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 121 ஆசனங்களைக் கைப்பற்ற அக்கட்சி சக்தி, ஏவுகணை திறமையை பெறுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும்- காஷ்மீர் தீவிரவாதிகளுக்கான ஆதரவை நிறுத்திக் கொள்ளுமாறும் காஷ்மீர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண இந்தியாவுடன் சேர்ந்து செயற்படுமாறும் சிறிது காலமாக அமெரிக்கா பாகிஸ்தான் மீது நிர்ப்பந்தம் பிரயோகித்துவருகிறது.

1990 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆயுத மோதல் ஏற்படுவதை தான் இருதடவைகள் தடுத்ததாக அமெரிக்கா கூறுகின்றது. கெடுபிடிப்போர் முடிவுற்றுள்ள சூழ்நிலையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே முழு அளவிலான போர் மூளுவதும் சாத்தியமற்றதாகும்.

இந்நிலையில் இரு நாடுகளும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியுள்ளது.

இரு நாடுகளினதும் வெளிவிவகாரச் செயலாளர்கள் அண்மையில் பாகிஸ்தானில் கூடி பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். காஷ்மீர் தொடர்பாக முன்னேற்றம் எதுவும் காணப்படாதபோதிலும் இப்பேச்சுவார்த்தைகள் தொடராவிருக்கின்றன. சர்வதேச ரீதியில் ஏற்படக் கூடிய சில காரியங்களைச் செய்ய நட்பு நாடுகளிடமிருந்து இந்தியாவுக்குபலத்த நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஜனநாயக அரசாங்கம் ஒன்று இப்பொழுது இருப்பது பாகிஸ்தானின் கரத்தை வலுப்படுத்தியுள்ளது.

நன்றி: இன்டர்கோ பிரஸ்

கானியில் பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், மாகாண சபை முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த சுதந்திரக்கட்சி தனது கொள்

## சுருக்கெழுத்தாளர் வார விழா

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகமும், தேசிய தொழில் பயிலுனர் கைத்தொழில் அதிகாரசபை சுருக்கெழுத்தாளர் தொழில் பயிலுனர்களும் (வடமராட்சி) இணைந்து நடாத்தும் சட்டச்சுத்தந்தைகள் ''ஷோல்ஸ்'', ''முத்தையா'' வார விழாவினை 13-2-94 ஞாயிறு பி. ப 2 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடாத்தவுள்ளது.

## கரபந்தாட்டம்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதிமன்றம் பங்குபற்றியது: அரியாலை அருணோதய விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் மிகவும் சுறுசுறுப்பாக விளையாடிய மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பாரதி விளையாட்டுக் கழகத்தை 2-1என்னும் புள்ளியில் வெற்றியீட்டியது. இப்போட்டியில் நடுவராக திரு. கே. இராஜரட்ணம் அவர்கள் கடமையாற்றினார்.

# அமெரிக்கத் தூதுவரகம் முன்பாக புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

பில் கிளிண்டன் வீழ்க! அமெரிக்காவே அறிவைப் பெறு! என்ற கோஷங்களோடு இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதுவரகத்தை ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முற்றுகையிட முயன்றனர்.

ஆளும் காங்கிரஸ் கட்சி இளைஞர் அணியினர் பொலிசார் அனுமதியைப் பெற்று மகஜர் ஒன்றைக் கையளிக்க முனைந்தனராயினும், திடீரென அமெரிக்காவுக்கு எதிரான போக்கு தலைதூக்கியதை அடுத்து பொலிசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டனர். சிலரைத் தூக்கிஎறிந்த பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களின் முகங்களுக்கு குழாய்கள் மூலம் நீர்பாய்ச்சி பொலிசாரின் தடுப்பிற்கு அப்பால் பின்வாங்கச் செய்தனர்

அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் பஞ்சாப்மற்றும் காஷ்மீர் விடயங்கள் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களின் மூலமாக இந்திய உள்விவகாரங்களில் தலையிடுவதாக குற்றம் சாட்டப்படுவது தெரிந்ததே.

# வாஷிங்டனுடன் டில்லியின் நட்புறவு பலமடையும்

## அமெரிக்க வர்த்தக அமைச்சர்

(டில்லி)

இந்தியாவில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுவரும்பொருளாதாரமாற்றங்கள்புதுடில்லிக்கும் வாஷிங்டனுக்கும் இடையில்நெருங்கியஒத்துழைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு அளித்துவருவதாக அமெரிக்க வர்த்தகதுறைஅமைச்சர்டொனால்ட் றோவ் கருத்து தெரிவித்துள்ளார். வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதுவர் சித்தாத்த சங்கர் ரேயை சந்தித்துப் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், உலகிலேயே மிகப் பெரும் வர்த்தக சந்தையாக இந்தியா உருவாகி வருவதாக அமெரிக்க வர்த்தகத்துறை இனங்கண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஆயுதங்களைக் கைவிட பர்மியகிளர்ச்சிக்குழு மறுப்பு

(பர்மா)

பர்மாவின் அதிசக்தி வாய்ந்த கெரில்லாக்களின் தலைவர் தாம் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

நாடு பூரணமாக ஜனநாயகப் பாதையில் செல்லும்வரை ஆயுதங்களைக் கைவிட மாட்டோமென கெரில்லாத் தலைவர் அறிவித்துள்ளார். வட கிழக்கு பர்மிய மாநிலமான ஷானில் இயங்கும் இந்தக் கெரில்லா இயக்கம் அரசாங்கத்துடன் யுத்த நிறுத்தம் குறித்து நான்கு ஆண்டுகளுக்கு முன் பேச்சுவார்த்தை நடத்தியது. போதைப் பொருள் வளர்ப்புக்குப் பெயர் போன ஷான் பகுதியில் அதிகளவு அதிகாரம் இந்த கெரில்லாக்கள் வசமேயுள்ளது.

'வா' கெரில்லாக்கள் என இவர்கள் அழைக்கப்படுகின்றனர். அரசபடைகள் இங்கு செல்வதானால் கெரில்லாக்களின் அனுமதியுடனேயே செல்ல வேண்டும். 'வா' கெரில்லா இயக்கத்தின் சிரேஷ்ட அதிகாரியான ஆய் ஷியோ சூ கருத்து வெளியிடுகையில் தமது உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கைவிட மாட்டார்களெனக் கூறினார்.

தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று அவசியம். ஜனநாயகம் முற்றாக நிலைக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களைக் கைவிடுவோமெனக கெரில்லாக்கள் தெரிவித்துள்ளனர். தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தில் 'வா' கெரில்லாக்களும், சிறுபான்மை இனத்தவர்களும் சுதந்திரமாக இயங்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என கெரில்லாக்கள் கூறியுள்ளனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**02.02.1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 553

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1019, 26-2070, 27-7081, 26-3473, 26-4376, 27-7669, 26-7068, 26-2941, 26-9158, 26-0375, 26-6398, 26.8051, 24-4560, 24-6972, 26-4809, 26-8600, 22-3088, 43-5726.

# நிபந்தனைகளை விதிப்பதனால் இனப்பிரச்சினை தீரப்போவதில்லை

### முன்னாள் பிரதமர் தகநாயக்கா கூறுகிறார்

(கொழும்பு)

பிரச்சினைகள் பற்றிப் பேச்சுநடத்தாமல் நிபந்தனைகள் விதிப்பதனாலும் பேரம் பேசிக் கொண்டிருப்பதாலும் பிரச்சினை என்றும் தீரப் போவதில்லை. எனவே யுத்தம் உடனடியாக நிறுத்தப் படவேண்டும். எதனடிப்படையில் - எந்தக் கோரிக்கைகளுக்காகயுத்தம் ஆரம்பிக்கப்பட்டதோ அதுகுறித்துவிரிவாகஆராயப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர்களில் ஒருவரும் காலித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ. தகநாயக்கா தெரிவித்தார்.

'லங்காதீப' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; ''என்னை சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சந்தித்த போது நான் இக்கருத்தையே வற்புறுத்தினேன். இதைத் தவிர வேறு எந்தவிதத்திலும் தீர்வு ஏற்படும்என நான் நம்பவில்லை.

இப்பிரச்சினை தொடருமானல் பாதிப்பு அனைவருக்கும் தான் என்பதனை நாம் உணரவேண்டும்'' என்றார்.

## நெடுங்கேணிப் பகுதியில் புக்காரா தாக்குதல்

### ஒருவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நெடுங்கேணியில் நேற்று முன்தினம் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின. இத்தாக்குதலால் ஒருவர் காயமடைந்தார். வீடு ஒன்று சேதமடைந்தது.

நண்பகல் 12-00 மணியளவில் நெடுங்கேணியை சுற்றி வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் தாக்குதலை நடத்தின. நெடுங்கேணி மகா வித்தியாலய மாணவர்கள் அச்சத்தால் நாலாபுறமும் சிதறி ஓடினர். இக் குண்டு வீச்சினால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

## கோமாரி கப்பல் பயணிகள் கவனத்திற்கு

தற்போதைய சூழ்நிலையில் ''கோமாரி'' கப்பல் 04-ம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கிப் புறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் பயணம் செய்வதற்கு தமது பெயர்களைப் பதிவு செய்த பிரயாணிகள் அன்று பிற்பகல் 2-00மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இத்தகவலை திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

## மகளிர்இல்ல ஆண்டுவிழா

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆரம்பமாகி இன்று பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

இந்நிகழ்வை முன்னிட்டு தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று ஸ்நபன அபிஷேகம் விஷேடபூசை வழிபாடு ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெறும். (24)

### வடக்கில்

மட்டும் வழங்கியிருந்தது. அப்போது வடக்கில் பாரிய சேதங்கள் இல்லை என்றும் தெரிவித்தது. ஆனால் நாங்கள் இங்கு வந்து பார்த்ததுமே நிலைமையை புரிய முடிகிறது என்றார். (யோ)

## 2ஆம் லெப்.நெடியோனுக்கு மக்கள் அஞ்சலி

கடந்த 31.01.94 அன்று மணலாறுபகுதியில்சிறிலங்கா இராணுவத்தினருடன் திடீர் என்று ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முத்தையன்கட்டு இரண்டாம் கண்டத்தைச் சேர்ந்த 2ஆம் லெப். நெடியோன் - கோவிந்தன் கேதீஸ்வரன் என்ற மாவீரனின் வித்துடல் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் அவரது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அம்மாவீரன் கல்வி கற்ற பாடசாலையானமுத்தையன் கட்டு வலதுகரைப்பாடசாலையிலும், ஒட்டிசுட்டான் சிவன் கோவிலடி என்ற இடத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் இராணுவ மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் மாவட்ட கலைபண்பாட்டுக்கழக பதில் பொறுப்பாளர் செல்வம், திரு ஜெயதீஸ்வரன், மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் திரு. பூவண்ணன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

அம்மாவீரனுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்ட பின் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

## சமாதான முயற்சியில் பிக்குகள் ஈடுபடவேண்டும்

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

பௌத்த மத குருமார் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவார்கள் எனில் சாதகமான முடிவுகளைப் பெற முடியும் என தான் நம்புவதாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பான்மையினர் மதமாகிய பௌத்தத்தின் குருமார்கள் இம்முயற்சியில் ஈடுபடல் வேண்டும். இவ்வாறு ஈடுபடும் மதகுருமார் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைநடாத்தி ஒரு முடிவை எடுத்துக் கொண்டு வடபகுதிக்குச்செல்வதே சிறந்தது என மேலும் அவர் தெரிவித்தார்.

### நிபந்தனையற்ற

பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பல மணிநேரம்பேச்சு வார்த்தை நடைபெற்றபோதும் அவர்கள் நிபந்தனை அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதை விரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

### அரசியலமைப்பு

வழங்கும் என காமினி திசநாயக்கா கூறியுள்ளார்.

அநேகமான எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை கொண்டுவரப் படவேண்டும் என கோரி வந்துள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

### வெளிநாட்டவர்

னார். அங்கிலிக்கன், குவாக்கஸ் போன்ற அமைப்புகளும் அமைதி ஏற்படுத்த முயற்சிக்கின்றன. பொஸ்னிய தகராறு சோமாலியாவில் ஐ. நாவின் அனுபவமும் இலங்கையில் சர்வதேச அமைதிகாக்கும் பணி என்ற நிலையை வெகு தொலைவிற்கு கொண்டு சென்றுவிட்டது. எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி

இதேவேளை 'திவயின' பத்திரிகைக்கு இது குறித்து கருத்துத் தெரிவித்த அரசதரப்புப் பேச்சாளர் ஒருவர் புதிய திட்டத்தின்படி, பாராளுமன்றத்தில் ஆகக் கூடிய உறுப்பினர்களைக் கொண்ட கட்சியே ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கமுடியும். இதன் மூலம் பாராளுமன்றத்திற்கும்ஜனாதிபதிக்கும் இடையிலுள்ள தொடர்பை மீண்டும் பேணமுடியும். இதன் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்தைப் பொறுப்பேற்று நடாத்தக் கூடிய நிலை தோன்றும் என்றார்.

தற்போதைய ஜனாதிபதி தெரிவு முறை 1978இல் அமு

### வீரச்சாவு

பாடசாலையடி மிருசுவில் வடக்கு மிருசுவில்) வீரச்சாவடைந்தார். இவருடைய பெயர் வீரவேங்கை உதயகுமார் என 31.01.1994

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இரத்தினசிங்கம்

சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் புகையிரத பாதைப்பிரிவில் சிற்றூழியர் மேற்பார்வையாளராக கடமையாற்றி இளைப்பாறியவருமாகிய கந்தையா இரத்தினசிங்கம் அவர்கள் 02-02-94 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார். இவர் பரிமளத்தின் அன்புக் கணவரும், பத்மநாதன் (பிரான்ஸ்), பத்மசோதி, பத்மசீலன் (C. E. B. வவுனியா), பத்மகிருஸ்ணன், பத்மரஞ்சன் (போராளி மணிமுடி), பத்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திசையரத்தினம், வத்சலா, நேசகாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தி, நிசாந்தன், தேனுகா, மயூரியா, மயூரன், சயரதன் ஆகியோரின் அன்புப் பேரனும், குணரத்தினத்தின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-02-94 புதன்கிழமை அவரதுவீட்டில் நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரேசனடி, சுன்னாகம். (7402) தகவல்; பத்மகிருஸ்ணன்

### இராசா கனகசபாபதி

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகக் கொண்ட இராசா பொன்னம்மா ஆகியோரின் மகன் கனகசபாபதி 02-02-94 இல் காலமாகி விட்டார். இவர் நெடுங்கேணி சௌந்தரேஸ்வரி நகைத் தொழிற்சாலை உரிமையாளரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சாமுண்டீஸ்வரி, கமலலோஜினி, அருணகிரிநாதன் (மேற்கு ஜேர்மனி), விவேகானந்தராசா (சௌந்தரேஸ்வரிநகைத்தொழிற்சாலைகிளிநொச்சி), திலகவதி (இணுவில் மத்தியகல்லூரி ஆசிரியை), சிவானந்தன் (மேற்கு ஜேர்மனி), கயிலேயங்கிரிவாசன், குகதாஸ், நிஜிதா, இந்திரதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா, வரதராசா ஆகியோரின் மாமனாரும், செந்தில்குமரன், கஜானனி, கஜானந்தன் ஆகியோரின்பேரனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நல்லடக்கம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறிமரத்தடி, கொக்குவில். (7405) தகவல்: விவேகானந்தராசா (மகன்)

காலத்தால் அழியாத வீரகாவியத்தை
உங்கள் கண்ணெதிரே காணுங்கள்
பாயும்புலி பண்டாரவன்னியனின்
வீரவரலாற்றைப் பார்த்துப் பரவசமடையுங்கள்
எம்மண்ணில் கடைசிவரை நின்று அந்நியருக்கெதிராக
வாளேந்திய வரிப்புலி
பண்டாரவன்னியனின் வரலாற்று நாடகம்
பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!
விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து தரும்
முல்லை மாவட்ட கலைஞர்களின்
முத்துக்கள் இரண்டு

(7405) (மகன்)

## திரு. தம்பாப்பிள்ளை இராசரத்தினம்
### (தம்பிநாதர்)

மீசாலை வடக்கைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை இராசரத்தினம் (ஓய்வுபெற்ற இலிகிதர் கல்வித்திணைக் களம்) 1-02-94ல் காலமானார். இவர் காலஞ் சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற மௌலீஸ்வரன், பரமேஸ்வரன், காலஞ் சென்ற இரத்தினா தேவி, காலஞ்சென்ற நாகேஸ்வரன், மல்லிகாதேவி, கேதீஸ்வரன், பாக்கியமங்கை, வசந்தாதேவி, ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, விநாயகமூர்த்தி, வசந்தமலர், ஸ்ரீ இளஞ் சிங்கநாதன், தேவேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியை வியாழக் கிழமை இன்று (3-02-94) சங்கத்தானையில் நடைபெறும்.

திரு. அ. இராமநாதன்
பழைய விதானையார்,
பெருங்குளம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
திருமதி
பா. ஸ்ரீ இளஞ்சிங்கநாதன்
(மகள்)

(7391)

## திருமதி மனோன்மணி பசுபதி

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த திருமதி மனோன்மணி பசுபதி 31.01.94 திங்கட் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நா. க. பசுபதியின் அன்பு மனைவியும், அசுபதி (புகையிரத திணைக்களம்), திருப்பதி (வீடமைப்பு திணைக்களம்), இரகுபதி (பொறியியலாளர் U.K), ஜெகசிவமணி (U K), கணபதி (திட்டமுகாமையாளர் கொலவினோ நிறுவனம் கொழும்பு), ஆனந்த நடேசன் (இலங்கை வங்கி சாவகச்சேரி), பேரின்ப யசோதா (V.K: Enterprises) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலவீரசிங்கம் (துறைமுக அதிகாரசபை திருகோணமலை), தர்மபாலன் (விலைமதிப்பீட்டாளர் விலைமதிப்பு திணைக்களம்), மங்கையர்க்கரசி (U.K), விஜயராஜசிங்கம் (U.K), கலாஜோதி, தனவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஷ், ரஞ்சன், குலரூபினி, விசாகன், குலநந்தினி, தனஞ்சயன், ஜனனன், விதுர்த்திரா, ஆதித்தியா, நிருபன், செந்தூரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார். இன்று (வியாழன்) காலை 9 மணி அளவில் பருத்தித்துறையில் உள்ள கடற்கரை வெளிச்ச வீட்டிற்கு அண்மையில் உள்ள மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இதைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி கிழக்கு,
கல்லடி ஒழுங்கை,
தம்பளை வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
ப. ஆனந்த நடேசன்

(7396)


## முத்துக்கள் இரண்டு



# பாயும்புலி பண்டாரவன்னியன்
(வரலாற்று நாடகம்)

# ஆக்கிரமிப்பாளரின் அவலம்
(இசை நாடகம்)

இடம் : யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலைஅரங்கு
காலம்: 05-02-94 சனி பி. ப. 4-00 மணி
அன்பளிப்பு: *1000/- 500/- 15/- 10/-*

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் நிதர்சனமும்

விளம்பர அன்பளிப்பு:
அழகியல் அழகுசாதன மாளிகை
பெரியகடை, யாழ்ப்பாணம். (7401)


இவருடைய பெயர் வீரவேங்கை உதய குமார் என 31.01.1994 ஈழநாதம் பத்திரிகையில் தவறுதலாக இடம்பெற்று விட்டது என அறியத்தருகிறோம்.

### வெளிநாடு

செல்ல விமானம் ஏறும் சமயத்தில் தேசிய உளவு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பொருட்டு இவர் கட்டுநாயக்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட. பின்பே தப்பி ஓடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி தெரிவு முறை 1978இல் அமுலானது எனவும், ஜனாதிபதியின் இப்புதிய யோசனை அப்பதவி மேல் அரசாங்கம் கொண்டுள்ள பிடியை தொடர்ந்து பேண முன்வைக்கப்பட்டவை எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது

### புலிகளுடன்

நேற்று அறிவித்தது.

மேலும் அவர் இலங்கையில் எந்தவொரு தேசிய பிரச்சினை குறித்தும் பேச்சு வார்த்தை நடத்த தமது அரசு எப்பொழுதுமே தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்
### சு. வைத்திலிங்கம்
(இளைப்பாறிய செனட் சபை உத்தியோகத்தர்)

அரசடி வீதி இருபாலையைச் சேர்ந்த சு. வைத்திலிங்கம் நேற்று (2-2-94) இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றதிருமதி வள்ளிப்பிள்ளை அவர்களின் கணவரும், திரு. வை. சுப்பிரமணியம் (பிரதிப் பொதுமுகாமையாளர், கிழக்கு மாகாணம், இலங்கை மின்சாரசபை), Dr. வை. தியாகராஜா (உரிமையாளர் மெடி எயிட்ஸ் நிறுவனம், தலைவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு, உப தலைவர் லயன்ஸ் கழகம் கோப்பாய், போஷகர் மக்கள் நலன்காக்கும் பிரிவு, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி சு. திலகவதி, திருமதி தி. ரஞ்சிதமலர் ஆகியோரின் மாமனாரும், சுகந்தினி, சுரேந்திரன், சுதர்சினி, சுரேஷ்குமார், ரதிவதனி, றிஸ்வி, பிரஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (3-2-94) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செலலப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
Dr. வை. தியாகராஜா

''ராஜஸ்தான்''
இருபாலை,
கோப்பாய்.

(7406)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.